**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.**25/2017

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ஆம் நாள் **வா.சா.1** சாட்சி **திரு.மதியழகன்** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திரு.மதியழகன்** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**வா.சா.1 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

19.01.2014ம் தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.4,00,000/-க்கு எழுதிக்கொடுத்த

பிராமிசரி நோட் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 20.10.2015ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு கொடுத்த பதிவு அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 08.12.2015ம் தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 19.12.2016ம் தேதியிட்ட வாதி பிரதிவாதி வழக்கறிஞருக்கு கொடுத்த 2ம் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.